**செ.வெ.எண்: 17** **நாள்: 07.03.2017**

## <u>பத்திரிகைச்செய்தி</u>

அரசு நிலை ஆணை எண்:313, பொது (பல்வகை) துறை நாள்:11.03.1997-இல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கிணங்க புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.,ஆ.ப., ஆகிய நான், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை நகரத்தைச் சேர்ந்த திருவப்பூர் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோவில் தேர்த்திருவிழா 13.03.2017 அன்று நடைபெறுவதை முன்னிட்டு அன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை எனவும், அதற்கு பதிலாக 25.03.2017 சனிக்கிழமை அன்று பணிநாள் எனவும், வழக்கமான சனிக்கிழமைகளை பணிநாளாக கொண்ட அலுவலகங்களுக்கு 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று பணிநாள் எனவும் அறிவிக்கிறேன்.

இந்த உள்ளூர் விடுமுறை 1881-ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழான விடுமுறை நாள் அல்ல எனவும், இந்த உள்ளூர் விடுமுறை நாளன்று புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மாவட்ட கருவூலமும் மற்றும் சார்நிலை கருவூலகங்களும் குறைந்தபட்ச அலுவலர்களுடன் அரசின் பாதுகாப்பினைக் கருதியும் அவசர அலுவல்கள் மேற்கொள்ளும் பொருட்டும் திறந்திருக்கும் எனவும் அறிவிக்கிறேன். மேலும் அரசு பொதுத்தேர்வுகள், அரசு அறிவித்த தேதிகளில் நடைபெறும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**